2023(2024)/OL/61/T/Q/T-1

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | **2023 (2024)**

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය

**Model Paper**

**மாதிரி வினாத்தாள்**

# Geography

# புவியியல்

# භූගෝල විද්‍යාව



**Question Paper - I, II** | **வினாப்பத்திரம் - I, II**

மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு | භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education, Sri Lanka**

| 61 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය -අනුහුරු ප්‍රශ්න පත්‍රය - 2023 (2024)
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - மாதிரி வினாப்பத்திரம் - 2023 (2024)**
**G. C. E. Ordinary Level Examination – Model paper - 2023 (2024)**

භූගෝල විද්‍යාව I, II
**புவியியல் I, II**
**Geography I, II**

*පැය තුනයි.*
*மூன்று மணித்தியாலம்*
*Three Hours*

*අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.*
*மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்*
*Additional Reading Time – 10 minutes*

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## புவியியல் I

* **இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது.**
* ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக **எல்லா வினாக்களுக்கும்** இவ்விடைத்தாளிலேயே விடை எழுதுக.

- **01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1.வளிமண்டலத்தின் மொத்த வளி உள்ளடக்கமானது புவிமேற்பரப்பிலிருந்து ……………..கிலோமீற்றர் வரையுள்ள பகுதியில் காணப்படுகிறது. (4-5/ 5-6 / 6-7)

2. ……………….உயர் சனத்தொகை பரம்பல் கொண்ட கிழக்காசிய நாடாகும். (யப்பான் / தென்கொரியா / இந்தோனீசியா)

3. இலங்கையின் கணிய நெய் சுத்திகரிப்பு நிலையம்……………….. அமைந்துள்ளது. (ஒருகொடவத்த / சப்புகஸ்கந்த / கெரவலபிடிய)

4.புவியில் அதிக வெப்பம், அமுக்கம் என்பவற்றால் உருவாக்கப்படும்………………….,தாய்ப்பாறைகள் எனவும் அழைக்கப்படுகின்றன.( தீப்பாறைகள் / அடையற் பாறைகள் / உருமாறிய பாறைகள்)

5. இலங்கையின் நெற்பயிர்ச்செய்கையானது பிரதானமாக………………வலயங்களில் மேற்கொள்ளப்படுகிறது. (3 / 4 / 5)


- **6 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் “ச” ஐயும், பிழையாயின் “பி” ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

6. பளிங்குருவான காரியம் மிகவும் பெறுமதி வாய்ந்த கணியமாகும். (ச / பி)
7. போல்ரிக் கடலானது பகுதியளவில் நிலத்தால் சூழப்பட்ட கடலாகும். (ச / பி)
8. உலகில் காலநிலைப் பரம்பல் தொடர்பாக முதன் முதல் கருத்தினை வெளியிட்டவர் அரிஸ்டோட்டில் ஆவார். (ச / பி)
9. காட்டுத்தீயானது உயிரியல் ரீதியான ஒரு அனர்த்தமாகும். (ச / பி)
10.அம்பாந்தோட்டை பருதகந்த பிரதேசத்தில் காற்று வலுச்சக்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. (ச / பி)

**11 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

11. புவிமேற்பரப்பின் மொத்த பரப்பளவு…………………….சதுர கிலோமீற்றர்களாகும்.
12. கதிர்காமமானது………………சுற்றுலா வலயத்துக்குள் உள்ளடங்குகிறது.
13. 1992ஆம் ஆண்டு ரியோடி ஜெனிரோ நகரில் ………………...மாநாடு நடைபெற்றது.
14. முகில்களுக்கும், பூமிக்குமிடையே இடம்பெறும் மின்கவர்ச்சி விசை………………..எனப்படும்.
15. இலங்கையில் முதன்முதலில் இறப்பர் மரம் ………………பூங்காவில் நடப்பட்டது.

- **கீழே தரப்பட்டுள்ள வரைபினை பயன்படுத்தி 16 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**
- **2014- 2022 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை தொடர்பான வரைபு கீழே தரப்பட்டுள்ளது.**




16. இலங்கைக்கு அதிகமான சுற்றுலா பிரயாணிகள் வருகை தந்த ஆண்டு………… ஆகும்..
17. இலங்கைக்கு குறைவான சுற்றுலா பிரயாணிகள் வருகை தந்த ஆண்டு…………..ஆகும்.
18. 2019 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை……ஆகும்.
19……………மற்றும்………. ஆண்டுகளில் இலங்கைக்கு சமமான அளவு சுற்றுலா பிரயாணிகள் வருகை தந்துள்ளனர்.

- **20 – 25 வரையுள்ள வினாக்களில் 'அ' இ 'ஆ' மற்றும் "ஆ" என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலிலுள்ள தகவல்களின் ஒழுங்கேற்ப 'ஆ' நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளமையைக் காட்டும் சரியான விடைக்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

20.

| **'அ'**<br>**காடுகளின் வகை** | **'ஆ'**<br>**பண்புகள்** |
|---|---|
| 1. இடைவெப்ப வலயக் காடுகள் | A. தெளிவான தட்டுக்கள் இல்லை |
| 2. அயன மழைக்காடுகள் | B. ஊசி போன்ற இலைகள் கொண்ட தாவரங்கள் |
| 3. ஊசியிலை காடுகள் | C. உயர் உயிர்பல்வகைமை |
| | D. குறைந்த தாவர வளர்ச்சி |

(1) ABC (2) ACD (3) BCA (4) DBA (…….)

21.

| **'அ'**<br>**பிரதேசம்** | **'ஆ'**<br>**வன சீவராசி ஒதுக்குகள்** |
|---|---|
| 1. நக்கீள்ஸ் | A. தேசிய பூங்கா |
| 2. ரிட்டிகல | B. சரணாலயம் |
| 3. ஆனைவில்லு | C. வன ஒதுக்கு |
| | D. கடும் பாதுகாப்பிற்குட்பட்ட ஒதுக்கு |

(1) ABC (2) ADC (3) CAB (4) CDB (…….)

22.

| **'அ'**<br>**இடர் வகை** | **'ஆ'**<br>**அனர்த்தம்** |
|---|---|
| 1. புவிசரிதவியல் இடர் | A. சுனாமி |
| 2. காலநிலை இடர் | B. தொற்றுநோய் |
| 3. உயிரியல் இடர் | C. புவிநடுக்கம் |
| | D. வரட்சி |

(1) BAD (2) CDA (3) CDB (4) DAB (…….)

23. 'அ' 'ஆ'

| பண்புகள் | வளிமண்டல படை |
|---|---|
| 1.சாதாரண விமானங்கள் பிரயாணம் செய்யும் | A. வெப்ப மண்டலம் |
| 2. சூரியனின் புற ஊதா கதிர்களை தடுக்கும் | B இடை மண்டலம். |
| 3. குறைந்த வெப்பமுடையது. | C. படை மண்டலம் |
| | D. மாறன் மண்டலம் |

(1) DAC (2) DBA (3) DCA (4) DCB (.......)

24. 'அ' 'ஆ'

| சமுத்திரம் | தீவுகள் |
|---|---|
| 1. பசுபிக் சமுத்திரம் | A.தஸ்மேனியா |
| 2. இந்து சமுத்திரம் | B. தாய்வான் |
| 3.அத்திலாந்திக் சமுத்திரம் | C. சீசல்ஸ் தீவுகள் |
| | D. கனேரிஸ் தீவுகள் |

(1) ABC (2) BCD (3) CBA (4) DCA (.......)

25. 'அ' 'ஆ'

| மண் வகை | பயிர்வகை |
|---|---|
| 1. செம்பூரான் மண் | A. தேயிலை |
| 2. உவர் மற்றும் மணல் மண் | B. தென்னை |
| 3. கபூக் கலந்த செம்மண் | C. இறப்பர் |
| | D. கோப்பி |

(1) ABC (2) BCD (3) CBA (4) DCA (.......)

- **26 தொடக்கம் 36 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான/ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

26. ஆசியாவின் ஊழியச் செறிவு அதிகம் கொண்ட பயிர்ச்செய்கை.
(1) கோதுமை (2) இறப்பர் செய்கை
(2) தேயிலை செய்கை (4) நெற்பயிர்ச்செய்கை (.......)

27. இலங்கையில் மத்தியநில தேயிலை உற்பத்தி செய்யப்படும் மாவட்டம்
(1) மாத்தளை (2) நுவரெலியா
(3) கேகாலை (4) காலி (.......)

28. தற்போது மோட்டார் வாகன உற்பத்தியில் ஈடுபடும் முதல் பத்து நாடுகளுள் காணப்படும் தென்னமெரிக்க நாடு.
(1) கொலம்பியா (2) ஆஜெந்தீனா
(3) பிரேசில் (4) உருகுவே (.......)

29. உலகின் மிகப் பழைமையான தேசப்படத்தினை உருவாக்கியவர்கள்,
(1) இந்தியர்கள் (2) மொசபத்தேமியர்கள்
(3) ஆபிரிக்கர்கள் (4) ஐரோப்பியர்கள் (.......)

30. இலங்கையின் அதிவேக நெடுங்சாலைகளுள் E4 நெடுஞ்சாலை குறிப்பது.
(1) மத்திய அதிவேக நெடுஞ்சாலை (2) கொழும்பு வெளிப்புற அதிவேக நெடுஞ்சாலை
(3) தெற்கு அதிவேக நெடுஞ்சாலை (4) கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை

31. புவிவெப்பமடைதலில் செல்வாக்கு செலுத்தும் இயற்கை காரணிகளுள் ஒன்று,
(1) கால்நடை வளர்ப்பு (2) அணுவாயுத பரிசோதனைகள்
(3) சூரியப்புள்ளிகள் (4) கைத்தொழிலாக்கம் (.......)

32. மனித அபிவிருத்தி சுட்டெண்ணை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் பிரதான குறிக்காட்டிகளுள் ஒன்று.
(1) பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு (2) பிரசவ மரண வீதம்
(3) சிசுமரணவீதம் (4) சனத்தொகை முதுமையடைதல் (…….)

33. செம்மஞ்சள் பொட்சோல் மண்ணின் விசேட பண்பாக கருதப்படுவது.
(1) அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் அதிகம் பரவியுள்ளது.
(2) மரக்கறி மற்றும் புல் செய்கைக்கு பொருத்தமானது.
(3) நதிக்கரைகள், சமவெளிகளில் பரவி காணப்படும்
(4) தாழ்நாட்டு ஈரவலயங்களில் பரவி காணப்படுகின்றன. (…….)

34. 2012 ஆம் ஆண்டு மத்திய வங்கி ஆண்டறிக்கையின் படி இலங்கைக்கு அதிக வருமானத்தை ஈட்டித்தந்த விவசாய பயிர்.
(1) தென்னை (2) தேயிலை
(3) சிறு ஏற்றுமதி பயிர்கள் (4) இறப்பர் (…….)

35. சேனாநாயக்க சமுத்திரம் எந்த நதிக்கு குறுக்காக அமைக்கப்பட்டுள்ளது.
(1) வளவை கங்கை (2) குபுக்கன் ஓயா
(3) கல் ஓயா (4) களனி கங்கை (……..)

36. 1:50000 இடவிளக்கப்படமொன்றில் மஞ்சள் நிறத்தில் காட்டப்படும் எல்லைகளை சரியாக காட்டும் விடை தொகுதி.
(1) தேயிலை செய்கை மற்றும் பிறவீதிகள்
(2) பிரதான வீதிகள் மற்றும் இறப்பர் செய்கை
(3) வீட்டுத்தோட்டம் மற்றும் அணைக்கட்டு
(4) பிறவீதிகள் மற்றும் வீட்டுத்தோட்டம் (……..)

- **A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து 37 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

A - 1. இறப்பு வீதம்
2. இயற்கை அதிகரிப்பு

B - 1. தரையுயர்ச்சி
2. வளிமண்டல அமுக்கம்

C - 1. இரசாயன பசளை பயன்பாடு
2. சூழல் மாசாக்கம்

D – 1. எழுத்தறிவு வீதம்
2. சனத்தொகை மூப்படைதல்

37. முதலாவதன் வீழ்ச்சி இரண்டாவதன் அதிகரிப்பிற்கும், முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் அதிகரிப்பிற்கும் காரணமான தலைப்பு சோடி.
(1) A (2) B (3) C (4) D (…….)

38. முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் வீழ்ச்சிக்கு காரணமாவதோடு மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் தலைப்பு சோடி.
(1) A (2) B (3) C (4) D (…….)

39. முதலாவதன் வீழ்ச்சி இரண்டாவதன் அதிகரிப்பிற்கு காரணமான தலைப்பு சோடி.
(1) A (2) B (3) C (4) D (…….)

40. மேற்குறிப்பிட்ட தலைப்பு சோடிகளுள் எவ்வித தொடர்புகளுமற்ற தலைப்பு சோடி.
(1) A (2) B (3) C (4) D (…….)

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 61 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - පෙරහුරු ප්‍රශ්න පත්‍රය - 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாதிரி வினாப்பத்திரம்- 2023 (2024)
**G. C. E. Ordinary Level Examination - Model paper - 2023 (2024)**

| | |
|---|---|
| භූගෝල විද්‍යාව | I, II |
| புவியியல் | I, II |
| Geography | I, II |

**புவியியல் II**

- ❖ இவ்வினாத்தாள் I II எனும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
- ❖ பகுதி I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- ❖ பகுதி II இலிருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்
- ❖ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்.

## பகுதி - I

1. **(அ) உமக்கு தரப்பட்டுள்ள 1:50000 அளவுதிட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் பகுதியை நன்கு அவதானித்து, அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் பயன்படுத்துக.**

**(i)** தொடக்கம் (v) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) Ⓐ - Ⓑ கோட்டினால் காட்டப்படும் அம்சம்.
(பள்ளத்தாக்கு /மென்சாய்வு / தொடரலை நிலம்) **(1 புள்ளி)**

(ii) Ⓒ எழுத்தினால் காட்டப்படும் நாற்பாக்கல் பகுதியில் காணப்படும் பிரதான வர்த்தக பயிர்.
(தென்னை / நெல் / தேயிலை) **(1 புள்ளி)**

(iii) Ⓓ எழுத்தினால் காட்டப்படுவது.
(வெளிச்சவீடு / வாடி வீடு / துறைமுகம்) **(1 புள்ளி)**

(iv) Ⓔ எழுத்தினால் காட்டப்படும் எல்லை.
(கிராம சேவகர் பிரிவு / மாகாண எல்லை/ பிரதேச செயலக எல்லை) **(1 புள்ளி)**

(v) Ⓚ எழுத்தினால் காட்டப்படும் நாற்பாக்கல் பகுதியில் காணப்படக்கூடிய நீரியல் அம்சம்.
(பின்னிய ஆறு /மியாந்தர் /நீர்ப்பிரிநிலம்) **(1 புள்ளி)**

(vi) படத்தில் புகையிரத நிலையங்களுக்கிடையிலான தூரத்தினை கிலோ மீற்றரில் தருக.? **(1 புள்ளி)**

(vii) Ⓕ எழுத்தினால் காட்டப்படும் கோட்டினை பெயரிடுக? **(1 புள்ளி)**

(viii) Ⓖ எழுத்தினால் காட்டப்படும் நாற்பாக்கல் பகுதியில் காணப்படும் பொதுசேவை வழங்கும் இரு நிறுவனங்களை பெயரிடுக? **(2 புள்ளிகள்)**

(ix) Ⓗ காட்டப்படுவது யாது? **(1 புள்ளி)**

**(ஆ) உமக்கு தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக எழுதவதற்காக உலகப் புறவுருவ படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் பயன்படுத்துக.**

- **தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவுசெய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

(i) பமீர் மேட்டு நிலம் - Ⓢ, Ⓣ, Ⓤ

(ii) சக்ரமன்ரோ நதி - Ⓜ, Ⓝ, Ⓞ

(iii) கியூபா - Ⓥ, Ⓦ, Ⓧ

(iv) அயர் ஏரி - Ⓒ, Ⓓ, Ⓔ

(v) குஷ்நெட்ஸ் – Ⓟ, Ⓠ, Ⓡ **(5 புள்ளிகள்)**

**(இ) உமக்கு தரப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக எழுதவதற்காக இலங்கை புறவுருவ படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் பயன்படுத்துக.**

- **(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவுசெய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக**

(i) போம்புவலை நெல் ஆராய்ச்சு நிறுவனம் Ⓖ, Ⓗ, Ⓘ

(ii) போகலை சுரங்கம் Ⓐ, Ⓑ, Ⓒ

(iii) இலங்கையின் முதல் சூரியசக்தி கூடம் Ⓓ, Ⓔ, Ⓕ

(iv) துறைமுக நகரம் Ⓞ, Ⓟ, Ⓠ

(v) இறப்பர் செய்கைக்காக புதிதாக அடையாளம் காணப்பட்ட மாவட்டம். Ⓛ, Ⓜ, Ⓝ **(5 புள்ளிகள்)**

## பகுதி II

**02.** (i) வளிக் கோளத்தினை வரையறை செய்க. **(2 புள்ளிகள்)**

(ii) மாறன் மண்டலத்தின் சிறப்பான பண்புகள் **மூன்றினை** குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) (a) வளிக்கோளம் மாசடைவதற்கு காரணமான **இரண்டு** மனித நடவடிக்கைகளை குறிப்பிடுக. **(2 புள்ளிகள்)**

(b) மேற்கூறப்பட்ட மனித நடவடிக்கைகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளக்கூடிய **மூன்று** நடவடிக்கைளை முன்வைக்குக **(3 புள்ளிகள்)**

**03.** (i) உலகில் தேயிலையை உற்பத்தி செய்யும் ஆசியா அல்லாத **இரு** நாடுகளை பெயரிடுக. **(2 புள்ளிகள்)**

(ii) பெருந்தோட்ட பயிர்ச்செய்கையின் **மூன்று** விசேட பண்புகளை குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) (a) உலகில் தேயிலையை உற்பத்தி செய்யும் நாடுகள் தமது உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய **இரண்டு** நடவடிக்கைகளை குறிப்பிடுக. **(2 புள்ளிகள்)**

(b) தேயிலை உற்பத்தியினால் இலங்கை பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய **மூன்று** நன்மைகளை குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

**04.** (i) உலகின் சனத்தொகையில் அதிகமானோர் வாழும் **இரு** கண்டங்களை பெயரிடுக. **(2 புள்ளிகள்)**

**வயது அடிப்படையிலான சனத்தொகை-2012**

| வயது பிரிவு | சதவீதம்% |
|---|---|
| சிறுவர் தங்கியிருப்போர் | 25.8 |
| ஊழியர் படை | 62 |
| முதியோர் தங்கியிருப்போர் | 12.2 |

**பால் அடிப்படையிலான சனத்தொகை-2012**

| பால் | சதவீதம் % |
|---|---|
| ஆண் | 48.5 |
| பெண் | 51.5 |

(ii) மேற்குறித்த 2012 சனத்தொகை தரவுகளின் அடிப்படையில் இலங்கையின் சனத்தொகை கட்டமைப்பில் அவதானிக்கக் கூடிய **மூன்று** பண்புகளை குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) இலங்கை சனத்தொகை மூப்படைதலால் ஏற்படக் கூடிய **மூன்று** பிரச்சினைகளை குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக. **(5 புள்ளிகள்)**


**05.** (i) 2008-2013 உலகின் இலத்திரனியல் கைத்தொழில் உற்பத்தி/வர்த்தகத்தில் முன்னணியில் திகழும் **இரு** நாடுகள் / வலயங்களை பெயரிடுக. **(2 புள்ளிகள்)**

(ii) உலக இலத்திரனியல் கைத்தொழிலின் **மூன்று** விசேட பண்புகளை குறிப்பிடுக .**(3 புள்ளிகள்)**

(iii) (a) இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய **இரு** பிரச்சினைகளை குறிப்பிடுக. **(2 புள்ளிகள்)**

(b) இலங்கையின் இலத்திரனியல் கைத்தொழில் போக்குகள் **இரண்டினை** குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக. **(5 புள்ளிகள்)**

**06.**




(i) வரைபடத்தில் **A** மற்றும் **B** எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள சுற்றுலா வலயங்களை பெயரிடுக. **(2 புள்ளிகள்)**

(ii) இலங்கையின் சுற்றுலா கைத்தொழில் எதிர்நோக்கும் **மூன்று** சவால்களை குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) இலங்கையின் சுற்றுலா கைத்தொழிலுடன் தொடர்புடைய அண்மைக்கால போக்குகள் **மூன்றினை** குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக. **(5 புள்ளிகள்)**

**07.** (i) பின்வரும் சமுத்திர பிரதேசங்களில் ஏற்படக்கூடிய சூறாவளிகளை பெயரிடுக.


(a) வங்காள விரிகுடாவை அண்டிய இந்து சமுத்திரப்பகுதி.

(b) வட அவுஸ்ரேலியாவின் வடமேற்கு கரையோரத்தை அண்டிய இந்து சமுத்திரப்பகுதி.**(2 புள்ளிகள்)**

(ii) சூறாவளியினால் பௌதீக மற்றும் மானிட சூழலுக்கு ஏற்படக்கூடிய **மூன்று** பாதிப்புக்களை குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) மேற்குறிப்பிட்ட அனர்த்தத்தினை எதிர்கொள்ள மேற்கொள்ளக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக. **(5 புள்ளிகள்)**

08. (i) படத்தில் **A** மற்றும் **B** என்பவற்றை பெயரிடுக. **(2 புள்ளிகள்)**




(ii) புவிவெப்பமடைதலுக்கு காரணமான பச்சை வீட்டு வாயுக்கள் **மூன்றினை** பெயரிடுக **(3 புள்ளிகள்)**

(iii) (a) புவிவெப்பமடைதலால் மானிட செயற்பாடுகளுக்கு ஏற்படக்கூடிய **இரண்டு** தாக்கங்களை குறிப்பிடுக. **(2 புள்ளிகள்)**

(b) காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை இழிவளவாக்குவதற்காக மேற்கொள்ளக்கூடிய **இரு** நடவடிக்கைகளை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக. **(3 புள்ளிகள்)**

**புவியியல்** II

Geography II

1· (அ)

I. ------------------------------------------------------------------------------------------

II. ------------------------------------------------------------------------------------------

III. ------------------------------------------------------------------------------------------

IV. ------------------------------------------------------------------------------------------

V. ------------------------------------------------------------------------------------------

VI. ------------------------------------------------------------------------------------------

VII. ------------------------------------------------------------------------------------------


VIII. ------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

IX. ------------------------------------------------------------------------------------------

/10


(ஆ)




N

(i) ☐
(ii) ☐
(iii) ☐
(iv) ☐
(v) ☐

(இ)




N

(i) ☐
(ii) ☐
(iii) ☐
(iv) ☐
(v) ☐

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - மாதிரி வினாப்பத்திரம் - 2023 (2024)

## புவியியல்

| 61 | T | II |
|---|---|---|




1:50,000

2023(2024)/OL/61/T/A/T-1

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | 2023 (2024)

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය
**Model Paper**
மாதிரி வினாத்தாள்

# Geography
# புவியியல்
# භූගෝල විද්‍යාව



අනුහුරු ප්‍රශ්න පත්‍රය සඳහා පිළිතුරු පත්‍රය
## Answer Sheet For Model Paper
மாதிரி வினாத்தாளுக்கான விடைப்பத்திரம்

மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව

**பகுதி II – விடைப்பத்திரம்**

01. 5-6 km
02. இந்தோனீசியா
03. சபுகஸ்கந்த
04. தீப்பாறைகள்
05. 4
06. பி
07. ச
08. ச
09. ச
10. பி
11. 510 சதுர கிலோ மீற்றர்கள்
12. தென் கரையோரம்
13. புவியுச்சி/ரியோ
14. புவிமின்னல்
15. கெளரத் கொட/ஹெளரத் கொட
16. 2018
17. 2021
18. 15 000
19. 2016 மற்றும் 2019
20. 3 BCA
21. 4 CDB
22. 3 CDB
23. 4 DCB
24. 2 BCD
25. 1 ABC
26. 4
27. 1
28. 3
29. 2
30. 1
31. 3
32. 1
33. 4
34. 2
35. 3
36. 4
37. 3 C
38. 1 A
39. 2 B
40. 4 D

**(1 புள்ளி வீதம் 40 புள்ளிகள்)**

## பகுதி-II விடைப்பத்திரம்

**1.** (அ)

(i) தொடரலை நிலம் **(1 புள்ளி)**

(ii) தேயிலை. **(1 புள்ளி)**

(iii) வெளிச்ச வீடு **(1 புள்ளி)**

(iv) கிராம சேவகர் பிரிவு **(1 புள்ளி)**

(v) மியாந்தர் **(1 புள்ளி)**

(vi) அச்சிடும் போது அளவுகள் மாறுபடுமென்பதால் அளவிட்டு சரியான விடைக்கு புள்ளி வழங்குக. **(1 புள்ளி)**

(vii) சம ஆழக் கோடு **(1 புள்ளி)**

(viii) வைத்தியசாலை/பாடசாலை/புகையிரத நிறுத்தம்/புகையிரத நிலையம்/நகர மண்டபம் **(2 புள்ளிகள்)**

(ix) அகல, நெடுங்கோடுகள் சந்திக்கின்ற இடம் **(1 புள்ளி)**

(ஆ)
(i) T
(ii) O
(iii) W
(iv) E
(v) R **(5 புள்ளிகள்)**

(இ)
(i) G
(ii) C
(iii) E
(iv) O
(v) L **(5 புள்ளிகள்)**

## பகுதி II

2.

I. புவியீர்ப்பு சக்தி காரணமாக புவியுடன் இணைந்து காணப்படும், பல்வேறு வாயுக்களை உள்ளடக்கிய மெல்லிய படை வளிமண்டலமாகும். **(2 புள்ளிகள்)**

II.
- புவி மேற்பரப்பிலிருந்து 8-12 KM வரை பரந்துள்ளது.
- வெப்ப நழுவு வீதம்.
- அனைத்து வளிமண்டல தோற்றப்பாடுகளும் இடம் பெறல்.
- புவிமேற்பரப்பிலிருந்து மாறன் மண்டலம் வரை வியாபித்துள்ளது.
- பிரதான வாயுக்களில் பெறும் பகுதியை உள்ளடக்கியிருத்தல்

**(1 புள்ளி வீதம் x 3 = 3 புள்ளிகள்)**

III. (a)
- உயிர்ச்சுவட்டு எரிபொருள் தகனம்
- காடழிப்பு
- கைத்தொழிலாக்கம்
- திண்ம கழிவு வெளியேற்றம்
- அணு பரிசோதனைகள் **(1 புள்ளி வீதம் x 2 = 2 புள்ளிகள்)**

b.
- மாற்று சக்தி வளங்களை பயன்படுத்தல்.
- மீள் காடாக்கம்.
- காடழிப்புக்கு எதிராக சட்டமியற்றல்.
- திண்ம கழிவு முகாமைத்துவம்
  சேதன முறை விவசாய முறைகளை ஊக்குவித்தல்
- வாகன புகை பரிசோதனை

**(1 புள்ளி வீதம் x 3 = 3 புள்ளிகள்)**

3.

I.

- கென்யா
- ஆஜெந்தீனா **(1 புள்ளி வீதம் x 2 = 2 புள்ளிகள்)**

II.

- பாரிய தோட்டங்களாக விரிவடைந்துள்ளமை
- உள்நாட்டு/வெளிநாட்டு தொழிலாளர்களை பயன்படுத்தல்
- சிறந்த முகாமைத்துவம் மற்றும் ஊழிய ஒழுங்கமைப்பு
- பல்வேறுபட்ட தொழினுட்பங்கள்
- அதிக அந்நிய செலாவணியை பெற்று தருதல்
- தேயிலைக்கான கேள்வி அதிகரித்து செல்கின்றமை **(1 புள்ளி வீதம் x 3 = 3 புள்ளிகள்)**

III. (a)

- விதை தேயிலையை விட தண்டு தேயிலை விருத்தி பெறுதல்
- இரசாயன பசளை பயன்பாடு
- உற்பத்தியில் பல்வகைமை
- தேயிலையை சந்தை படுத்த பல்வேறு உத்திகளை கையாளுதல்

**(1 புள்ளி வீதம் x 2 = 2 புள்ளிகள்)**

(b)

- அந்நிய செலாவணியை ஈட்டிக்கொள்ளல்.
- தொழில் வாய்ப்பக்களை பெற்றுக்கொள்ளல் (நேரடி/மறைமுக)
- உயர் மலை சார் பிரதேசங்களை தேயிலைச் செய்கைக்கு பயன்படுத்தல்.
- உற்பத்தி பிரதேசங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.
- இலங்கையின் உற்பத்தி நாமத்தை (Ceylon Tea) சர்வதேச ரீதியாக கொண்டுச்செல்லல் **(1 புள்ளி வீதம் x 3 = 3 புள்ளிகள்)**

4.

I.

- ஆசிய கண்டம்
- ஆபிரிக்கா கண்டம் **(1 புள்ளி வீதம் x 2 = 2 புள்ளிகள்)**

II.

- ஓப்பிட்டளவில் ஆண் சனத்தொகைக்கு ஈடான பெண் சனத்தொகை
- ஓப்பிட்டளவில் 60 வயதுக்கும் அதிகமான தங்கியிருப்போர்/முதியோர் சனத்தொகையானது சிறுவர் தங்கியிருப்போர் மற்றும் ஊழியபடையினருக்கு ஈடாக குறைவடைந்துள்ளது.
- சிறுவர் தங்கியிருப்போர் சனத்தொகையை காட்டிலும் ஊழியபடையினர் தொகை அதிகமாகும். **(1 புள்ளி வீதம் x 3 = 3 புள்ளிகள்)**

III.

- பராமரிப்பு கடினம்
- சுகாதாரம் மற்றும் பராமரிப்பு செலவு அதிகம்.
- முதியோருக்கான ஓய்வூதியம் மற்றும் உபகாரங்களுக்கான செலவு அதிகம்
- முதியோர் மற்றும் இளையோருக்கிடையிலான முரண்பாடுகள் அதிகரிப்பு
- முதியோர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கான கேள்வி அதிகரித்தல்.

**(பெயடுதல் 3 புள்ளிகள் + விளக்கம் 2 புள்ளிகள் = மொத்தம் 5 புள்ளிகள்)**

5.

I. ஐரோப்பா

வட அமெரிக்கா **(1 புள்ளி வீதம் x 2 = 2 புள்ளிகள்)**

- பாரிய மூலதனம்
- தொடர்ச்சியான ஆராய்ச்சிகள்
- பெரும்பாலான ஆளணியினர் விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், பயிற்றப்பட்ட தொழினுட்பவியலாளர்களாக காணப்படல்
- பெரும்பாலும் பல்தேசிய கம்பனிகளுக்கு சொந்தமாயிருத்தல்
- பொருத்தும் கைத்தொழிலாக மேற்கொள்ளப்படுகின்றமை

**(1 புள்ளி வீதம் x 32 = 3 புள்ளிகள்)**

II.

a.

- இலத்திரனியல் கழிவுகள் அதிகரித்தல்
- தொடர்ச்சியான ஆராய்ச்சிகள் இடம் பெறல்
- கலாச்சார பிரச்சினைகள் தோற்றம் பெறல்
- பல்தேசிய கம்பனிகளின் ஆதிக்கம்
- சுகாதார பிரச்சனைகள் தோன்றுதல் **(1 புள்ளி வீதம் x 2 = 2 புள்ளிகள்)**

b.

- நேரடி/மறைமுக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளல்.
- திறன்மிக்க, பயிற்றப்பட்ட தொழிலாளர்களை உருவாக்கக்கூடிய உயர்கல்வி நிறுவனங்கள், பாடசாலை கலைத்திட்டம் என்பவை உருவாக்கப்படல்
- இலத்திரனியல் உபகரணங்களை பழுதுபார்க்கும் நிலையங்கள் அமைக்கப்படல்
- பொருத்தும் கைத்தொழில்கள் நகரங்களில் ஸ்தாபிக்கப்படல்

**(பெயடுதல் 1 புள்ளி வீதம் × 2 + விளக்கம் 1 புள்ளி = மொத்தம் 3 புள்ளிகள்)**

6.

**I.** (A ) கொழும்பு பெரு நகரம் (B) மத்திய மலைநாடு **(2 புள்ளிகள்)**

II.

- சுற்றுலா வலயங்களுக்கண்மையில் உடகட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை
- சூழல் மீதான மோசமான பாதிப்புகள்
- சுற்றுலா பிரயாண கைத்தொழில் தொடர்பான தவறான எண்ணப்பாடுகள்
- கலாசார சீர்கேடுகள்
- சுற்றுலா பயணிகளின் வருகை வருடத்தின் குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படல் **(1 புள்ளி வீதம் x 3= 3 புள்ளிகள்)**

- உள்நாட்டு சுற்றுலா கைத்தொழில் வேகமாக விருத்தியடைந்து வருகின்றமை
- புதிய சுற்றுலா வலயங்களை அடையாளப்படுத்துதல்
- சுற்றுலா பிரயாணத்துக்கான வசதிகளை மேம்படுத்துதல்
- சுற்றுலா பிரயாண கைத்தொழில் தொடர்பான கல்விக்கு முக்கியத்துவம் வழங்குதல்
- சுற்றுலா பிரயாண கைத்தொழில் விருத்திக்கு தொழினுட்பத்தை அதிகம் பயன்படுத்துதல்

**(பெயடுதல் 1 புள்ளி வீதம் × 3 + விளக்கம் 2 புள்ளிகள் = மொத்தம் 5 புள்ளிகள்)**

7.

I.

(A ) சூறாவளி

(B) வில்லிவிலீஸ் **(1 புள்ளி வீதம் x 2 = 2 புள்ளிகள்)**

II.

<u>பௌதீக சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள்</u>

- கரையோரங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்
- நீர் மாசடைதல்
- மண் உவரடைதல்

**மானிட சூழுலுக்கு ஏற்படும் பாதிப்புகள்**

- மனித உயிர்,உடைமைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள்
- உட்கட்டமைப்பு வசதிகள் பாதிப்படைதல்
- மீன்பிடி கைத்தொழில் பாதிப்படைதல்
- தொற்று நோய்கள் பரவுதல் **(1 புள்ளி வீதம் x 3 = 3 புள்ளிகள்)**

III.

- மருத்துவ உதவிகளை வழங்குதல்
- பௌதீக உடைமைகளை முடியுமானளவு பாதுகாத்தல்

- உணவு,குடிநீர் வழங்குதல்
- தற்காலிக கூடாரங்களை வழங்குதல்
- மக்களின் பாதுகாப்பினை உறுதிபடுத்தல்

**(பெயரிடுதல் 1 புள்ளி வீதம் × 3 + விளக்கம் 2 புள்ளிகள் = மொத்தம் 5 புள்ளிகள்)**

8.

I. (A) சூரியனின் சிற்றலை கதிர்வீசல்
(B) புவிக்கதிர் வீசல் **(1 புள்ளி வீதம் x 2 = 2 புள்ளிகள்)**

II.

- நைதரசன் ஒக்சைட் ($N_2O$)
- குளோரோ புளோரோ காபன்(CFC)
- மீதேன் ($CH_4$)
- காபனீரொட்சைட்டு ($CO_2$)
- காபன் மொனொக்சைட்டு (CO) **(1 புள்ளி வீதம் x 3 = புள்ளிகள்)**

III.

a

- நிலம் உவரடைவதால் பயிர் நிலப்பரப்பு குறைவடைதல்
- தொற்றுநோய்கள் பரவுதல்
- மீன்களின் அறுவடை குறைவடைவதால் மீன்பிடி பாதிப்படைதல்
- நன்னீர் அசுத்தமடைதல்
- இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்தல்
- தாழ்நிலங்கள் நீரில் மூழ்குதலால் குடியிருப்புகள் அழிவடைதல்

**(1 புள்ளி வீதம் x 2 = 2 புள்ளிகள்)**

b.

- வாகன புகை பரிசோதனை (Eco-Test)
- மீள் காடாக்கம்
- திணம கழிவு முகாமைத்துவம்
- பல்லின பயிர்ச்செய்கை முறை
- மாற்று சக்தி மூலங்களை பயன்படுத்தல் (புதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்கள்)
- சேதன விவசாய முறைகள்

**(பெயடுதல் 1 புள்ளி வீதம் × 2 + விளக்கம் 1 புள்ளி = மொத்தம் 3 புள்ளிகள்)**

*****